அனுப்புநர்
முனைவர். ஞா. பால்ராஜ்,
முதல்வர்(பொ),
மாவட்டஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை மாவட்டம்.

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள்,
முதன்மைக் கல்வி அலுவலகங்கள்,
அனைத்து மாவட்டங்கள்.

ந.க.எண். 88/அ2/2026 நாள் 16.02.2026

அய்யா,

பொருள்: பள்ளிக் கல்வி – 2023-2024 ஆம் கல்வியாண்டு அறிவிப்பு எண்.11, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு தற்போது பணி நியமனம் வழங்கப்பட்ட முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி – கணிதவியல் மற்றும் பொருளியல் ஆகிய பாடங்களுக்கு 26.02.2026 முதல் 28.02.2026 வரை மூன்று நாட்கள் ஏலகிரியில் நடைபெறுதல் – ஆசிரியர்களை பணிவிடுவிப்பு செய்யக் கோருதல் – சார்ந்து.

பார்வை:
1. பள்ளிக் கல்வித்துறை, மானியக் கோரிக்கை எண்.43, அறிவிப்பு எண்.11
2. சென்னை-6, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.44750/எஃப்3/2024 நாள் 14.02.2026.

------

பார்வை 1-இல் காணும் 2023-2024 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளில் அறிவிப்பு எண்.11-இல் புதிய ஆசிரியர்களுக்கான பயிற்சி ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் அனைவருக்கும் கற்றல் கற்பித்தல் மற்றும் அடிப்படை நிருவாகப் பயிற்சிகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 2025-2026 ஆம் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்பட்டு தற்போது பணிநியமனம் வழங்கப்பட்டுள்ள முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணியில் சேர்ந்த பின்னர் கற்றல் கற்பித்தல் மற்றும் அடிப்படை நிருவாகப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. புதியதாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு (Including 2% Non Teaching) புகுநிலைப் பயிற்சியினை சென்னையில் கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள அண்ணா நூற்றாண்டு விழா நூலகக் கட்டடத்தில் 18.02.2026 அன்று புதன்கிழமை காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களது முன்னிலையில் அளிக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மண்டல அளவில் பாடவாரியாக தனித்தனியாக பயிற்சி வழங்கப்படவுள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கணிதவியல் மற்றும் பொருளியல் பாடங்களுக்கு கீழ்க்காணும் அட்டவணைப்படி பயிற்சி நடைபெறவுள்ளது. எனவே அனைத்து மாவட்டங்களிலும் புதியதாக பணிநியமனம் செய்யப்பட்டுள்ள கணிதவியல் மற்றும் பொருளியல் பாட ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலினை கீழ்க்காணும் Google Sheet-இல் பூர்த்தி 20.02.2026-க்குள் செய்வதுடன், அவர்களை உரிய நேரத்தில் பயிற்சியில் கலந்துகொள்ளும் வகையில் பணியிலிருந்து விடுவிக்க சம்மந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

| வ.எண். | பாடம் | ஆசிரியர்களின் எண்ணிக்கை | பயிற்சி நடைபெறும் இடம் | நாள் |
|---|---|---|---|---|
| 1 | கணிதவியல் | 207 | AGS Resort | 26.02.2026 முதல் 28.02.2026 |
| 2 | பொருளியல் | 140 | AGS Resort | 26.02.2026 முதல் 28.02.2026 |

| | | |
|---|---|---|
| Google Link | Mathematics | https://docs.google.com/spreadsheets/d/1_H8DaM-JyCMj-pKGi1seJJiVs5xVZwFcHvpK6wqOrRO/edit?gid=0#gid=0 |
| | Economics | https://docs.google.com/spreadsheets/d/1sVRX2KlfSuCoBOrVkYlbZUtkznK-GZV-2dxM3to8BJU/edit?gid=0#gid=0 |

16/02/26

முதல்வர்(பொ),
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும்
பயிற்சி நிறுவனம், கீழ்பென்னாத்தூர்
திருவண்ணாமலை மாவட்டம்.

16/02/26

நகல்: முதல்வர்கள், அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் – கனிவுடன் அனுப்பப்படுகிறது.